# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | C.C.87/2022 | Date | : | 08.02.2023 |
| Deposition of Witness for | : | அ.சா.1 | Taluk | : | Sankari |
| Name | : | ரிதீஸ்குமார் | Calling | : | **Branch manager** |
| Father/Husband Name | : | **Rajendra Sharma** | Religion | : | **Hindu** |
| Village | : | **Patna** | Age | : | 38 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.02.2023.
( 1,2,3 எதிரிகள் ஆஜர் , எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.)

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1. நான் தற்போது இந்தியன் வங்கி, சங்ககிரி கிளையில் மேலாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 17.10.2021 ம் தேதி இரவு 01.30 மணியளவில் என்னுடைய மொபைலுக்கு ஏ.டி.எம். சர்வேலன்ஸ் டீமில் இருந்து ஒரு குருஞ்செய்தி வந்தது. உடனே என்னுடைய மொபைலுக்கு சர்வேலன்ஸ் டீமில் இருந்து ஒரு நபர் அழைத்து ஏ.டி.எம் யில் ஏதோ தவறுதலாக தெரியவருவதாகவும் உடனே அங்கு சென்றுபார்க்கும்படி கூறினார்கள்.

2. உடனே நான் வங்கியில் பணிபுரியும் முருகேசன் மற்றும் வினோத்குமார் என்பர்களை அழைத்துக்கொண்டு கௌதம் மெடிக்கல்ஸ் டாக்டர்ஸ் லைனில் உள்ள எங்கள் இந்தியன் வங்கி ஏ.டி.எம் க்கு சென்றேன். நான் அங்கு சென்றுபார்த்தபோது, ஏ.டி.எம். க்கான மின்இணைப்பு துண்டித்து இருந்ததால் மின்விளக்கு எரியவில்லை. என்னுடைய மொபைலில் பார்த்தபோது அங்கு தீயினால் எரிந்ததற்கான அடையாளம் இருந்தது. பின்னர் என்னுடைய மண்டல அலுவலகத்தில் இருந்த பாதுகாப்பு அலுவலர்களை நான் அழைத்தேன்.

3. பாதுகாப்பு அலுவலர்களின் உதவியுடன் ஏ.டி.எம் யை சோதனை செய்தபோது ஏ.டி.எம் யில் இருந்த ரூபாய் 15,70,000/- திருடுபோகவில்லை. ஏ.டி.எம். அலுவலர் கவிபிரியா அவர்கள் ஏ.டி.எம். சோதனை செய்தபோது உடன் இருந்தார்.

எனக்கு தமிழ் தெரியாததால் எங்கள் ஏ.டி.எம். அலுவலர் கவிபிரியா அவர்கள் எழுதி என்னிடம் படித்துக்காட்டியதை அன்றைய மதியமே சங்ககிரி காவல்நிலையத்தில் எழுத்துமூலமான புகாராக கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில்உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது**)

4. நான் என்னுடைய வங்கிக்கு வந்து சி.சி.டி.வி பதிவுகளை பார்த்தபோது ஒரு நபர் கருப்பு கலர் ஸ்பிரேவை கேமராவில் அடித்தது தெரியவந்தது. அந்த நபர் ஒரு ரெயின்கோட் அணிந்துவந்திருந்தார். அந்த சமயத்தில் அவர் தாடி வைத்திருந்தார். 08.11.2021 ம் தேதி சங்ககிரி போலிசார் இந்த வழக்கில் சந்தேகப்பட்ட 2 நபர்களை பிடித்துவிட்டதாகவும், அவர்களை தெரியுமா என்றும் என்னிடம் கேட்டார்கள். அப்போது ஸ்பிரே அடித்த நபர் அங்கு இருந்தார். தற்போது அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்கமுடியும். நீதிமன்றத்தில் ஆஜர் ஆகி உள்ள எதிரிதான் அந்த நபர் ஆவார். (எதிரி பூபாலனை சாட்சி அடையாளம் காண்பித்தார் மற்றும் காவல்நிலையத்தில் இருந்ததாக மற்றொரு எதிரி ஜெகதீசன் என்பவரை அடையாளம் காண்பித்தார்). இதுசம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :

எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU Digitally signed by S R BABU Date: 2023.02.08 15:17:01 +0530

Sd /- Nithishkumar

Judicial Magistrate No.1,
Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.87/2022 | Date | : 08.02.2023 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : Sankari |
| Name | : கவிபிரியா | Calling | : Manager |
| Father/Husband Name | : P.Ramesh | Religion | : Indian-Hindu |
| Village | : Manjakkalpatti | Age | : 36 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 08.02.2023.
<u>( 1,2,3 எதிரிகள் ஆஜர் , எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர்.)</u>

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>** :

1, நான் தற்போது சங்ககிரியில் குடியிருந்து சேலத்திலுள்ள இந்தியன் வங்கியில் பணிபுரிந்துவருகிறேன். கடந்த 17.10.2021 ம் தேதி நான் சங்ககிரி இந்தியன் வங்கி கிளையில் பணிபுரிந்துகொண்டு இருந்தபோது, எங்களுடைய வங்கியின் மேலாளர் ரிதீஸ்குமார் அவர்கள் அதிகாலை 03.00 மணிக்கு என்னை தொலைபேசியில் அழைத்து கௌதம் மெடிக்கல்ஸ் அருகில் உள்ள இந்தியன் வங்கி ஏ.டி.எம். யிலிருந்து ஒருகுருஞ்செய்தி வந்திருப்பதாகவும் நான் ஏ.டி.எம். அலுவலர் என்பதால் ஏ.டி.எம். யில் எதாவது தொகை காணாமல் போயுள்ளதா என சோதனை செய்யவும் வரச்சொன்னார்.

2, நான் பார்த்தபோது ஏ.டி.எம். யில் முன் கதவு வெல்டிங் மிசின் வைத்து உடைக்கப்பட்டு இருந்தது. சி.சி.டி.வி. கேமராவை கருப்பு கலர் ஸ்பிரே செய்து மறைத்திருந்தனர். அந்த ஏ.டி.எம். யில் இருந்த தொகை எதுவும் காணாமல்போகவில்லை. இதுசம்மந்தமாக எங்கள் மேலாளர் உயர்அதிகாரிகளிடம் கலந்து ஆலோசித்து பின்னர் மதியம் 01.00 மணியளவில் சங்ககிரி காவல்நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தார். அந்த புகாரை நான்தான் எழுதினேன். அந்த புகாரில் மேலாளர் கையொப்பம் செய்திருந்தார். இதசம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜர், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் தரப்பிற்கு வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

S R BABU
Digitally signed by S R BABU
Date: 2023.02.08 15:17:14 +0530

Sd /- Kavipriya

Judicial Magistrate No.1,
Sankari.